வள்ளியம்மை அலங்காரம்

சிறுமணவூர் முனிசாமி முதலியார்

vaLLiyammai alangkAram

by ciRumaNavUr munucAmi mutaliyAr

In Tamil script, unicode/utf-8 format

**Acknowledgements:**

Our Sincere thanks go to Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.

This e-text has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2026.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of Tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## வள்ளியம்மை அலங்காரம்
## சிறுமணவூர் முனிசாமி முதலியார்

**Source:**

வள்ளியம்மை அலங்காரம்.
இஃது சிறுமணவூர் முனிசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்டு,
தமது சென்னை சூளை, சிவகாமி விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
1905.

--------------

சிவராமஜெயம்,
கடவுள் துணை.

### வள்ளியம்மை அலங்காரம்.

விநாயகர் துதி

நேரிசைவெண்மா.
கொடியிடையாள்வள்ளி கொடியதவமிருந்து
வடிவேலன்றனை மணர்ந்த வற்புதத்தைப்—படிமிசையான்
அலங்காரமாய்ப்பாட யானைமுகாயென்னானில்
விலகாமற் குடியிருக்கவெண்.

---------

தெம்மாங்கு.
ஒன்பது ரத்தினமும் உருக்கிவிட்டபதுமையைப்போல்
அன்னநடைவள்ளியம்மை யருந்தபசு புரிந்திட்டாளே. (நன்னா)

அலங்காரம் - ஐயா,
ஆடை நீக்கிஅளகுநீக்கி அணிந்தபணிகள்முளுதும்நீக்கி
வாடைநீக்கிவரிசைநீக்கி வனத்தைனோக்கிமன தாக்கி.

ஐயா-ஊசிமுனையில் காலை நீட்டி வாசிமுலையில் மனதைப்பூட்டி
சுழியின்முனையில் விழியையோட்டி சுருதிமொழியை மழையாய் வாட்டி.

ஐயா-வகுசஸருகவடிவேல்வருக
வருகமுருக னருகில் வருக ( நன்னா)
----------------

தெம்மாங்கு,
இப்படியாய் வள்ளியம்மை யிருக்குத்தவக்கொடுமை
முப்புறமும்மூவர்களும் முழித்தல்லனா மிரண்டுவிட்டார் ( நன்னா)

அலங்காரம் ஐயா,
இந்திரனுலகம்செந்தணல்பாக்க இமையோரசாதிகள்சமயத்துரக்க
சந்திரசடையன்சிந்தையுந்துடிக்க சதமுகனும்மனதுகலங்க ஐயா,

வாட்டமுற்றதைக்கேட்டுமுருகர் ஓட்டமாக காட்டின்வளியே
தாட்டிமயிலைனாட்டமாகவே ஈட்டுந்தவத்தின்பேட்டியடுத்து

அடியே கொஞ்சம்வயது கொடியதவத்தில்
செஞ்சிவருந்த விபரமேது ( நன்னா)
-----------

தெம்மாங்கு.
இன்னமணம்புரியலியோ யிளவயதாய்க்கானுதடி
யென்னகுறைாநேர்ந்ததென்று யிப்பேர்ப்பட்ட தவமிருக்குறாய் ( நன்னா)

அலங்காரம் அடியே
சின்னவயதுசித்தரவடிவு கொஞ்சம்வயதுகுழந்தைபார்வை
யிந்தவயதிலென்ன வருத்தம் யிப்பேர்ப்பட்டதலத்தின்பொருத்தம்

அடியே
வாயைத்திறந்துவருத்தம்கூறு வரத்தைவாங்கியிடத்திற்சேரு
சேயையீன்றுசுகமாய்வாழு சாரத்தொல்லையைகடந்துதேறு

அடியே- யெடுவுன்கரத்தே பிடி நீவரத்தே
விடுவன்தவத்தே கடவுன்னிடத்தே ( நன்னா)

தெம்மாங்கு.

ஒன்றுக்குறைவுமில்லை வொருவரமும் வேண்டயில்லை
யென்னை மணம்புரிவீரென்றே யித்தனைநாள் தவமிருந்தேன் ( நன்னா)

அலங்காரம் ஐயா.

ஊரும்வேண்டாம்பதியும் வேண்டாம் ஒருவருறவும்பகையும்
வேண்டாபொன்னும்வேண்டாம்பொருளும் வேண்டாம்
புகழும்வேண்டாம் யிகழும்வேண்டாம்

ஐயா

எனக்குமாலைசூட்டவேண்டும் இன்பசுகத்தைக் காட்டவேண்டும்
உனக்குமனைவியாகவேண்டும் உலகம்புகழவாழவேண்டும்

ஐயா கருத்தையுரைத்தேள் வருத்தம்விடுத்தேன்
பொருத்தம்பிடித்தேன் மானைமுடித்தேன் ( நன்னா)

தவமிருந்துயெனையழைத்து தாலிகட்டச்சொல்லுகிறாய்
மகளுறவாய்நேர்ந்துபோச்சே மாலையிடவுங்கூடுமோடி, ( நன்னா)

அலங்காரம் அடியே

இந்திரன்மகளென்மனைவியாச்சே யுந்தன்குலமோகுறவராச்சே
யெர்விதத்தில்பறியும்பேச்சி உலகஞ்சிறிக்குமிந்தபேச்சு

அடியே

எனோமனதில் வருத்தமுற்றாய் இன்னோர்பிரவி பெடுக்கப்போறாய்
மானின்வயற்றிற் பிறக்கப்போறாய் மனதின்கவலைமுடிக்கபோறாய்

அடியே-கொஞ்சனாளே குரையைத்தானே
வஞ்சிக்கொடியே வருத்தம்சகியேன் ( நன்னா)

--------------

தெம்மாங்கு

இப்பிரப்பில் மணம்புரிய யேலாதென்றுசொல்லிவிட்டு
அற்புதமயில்மேலேறி யாண்டவனுந்தணிகைசேர்ந்தார்

( நன்னா)

அப்போ
கந்தனுரைத்தமொழியையறிந்து கன்னிவிசனக்கடலில்விழுத்து
யிந்தஜென்னமெடுத்தும்பழுது யிருந்ததவமுமொழிந்ததென்று

அப்போ
புரண்டு அழுதாள் புத்தியைமறந்தாள் உருண்டு அழுதாள்ஒங்கிளிவிழுந்தாள்
இருந்து அழுதாள்யேங்கினிழுந்தாள் என்னுடஉயிரும்லேண்டாமெ ன்றாள்

அப்போ-மோதியடித்தான் முகத்தையிடித்தாள்
ஆவிவிடுத்தாள் அண்டம் அடுத்தாள் ( நன்னா)
------------

தெம்மாங்கு
இங்கோடர்ததெல்லாம் எம்பெருமாள்தானறிந்து
மங்கையுடனிருவருமாய் மானுருவமெடுத்திட்டாரே. ( நன்னா)

அலங்காரம் ஐயா
கன்னிவருத்தமுடிக்கவேண்டி கந்தன்மனதைந்திருத்தவேண்டு
தன்னுடவைகுந்தமகத்தாண்டி தைரியலட்சுமிமனதை தூண்டி
ஐயாமாளைப்போலவடினமெடுத்து மாறாளைத்தைஊறாபடுத்து
மசனும்ரதிமாதியும்போலதொடுத்துளி தமுமதனகாளியெடுத்து

ஐயா -உள்ள மகிழ்ந்தார் உறமையிருந்தார்
வள்ளிக்கொடியில் மகனையின்றார் ( நன்னா)
------------

தெம்மாங்கு.
வேட்டைத்தொழிறுடைய வேடுவர்களப்பொழுது
காட்டுவழிவருகையிலே கண்டாரேகுழந்தைகன்னை: (நன்)

அலங்காரம் ஐயா
வார்பெடுத்து வாயோடனைத்தார் ச்சியைமுகந்து உடம்போடணைத்தார்

கனியைப்போலே கடித்துபார்த்தார் கண்னியைப்பொன்னிடனி யோயென்றார்

ஐயோ
வேட்டையாட மரந்துபோட்டார் வீட்டைத்தேடி திரும்பிபோட்டார்
கோட்டைபுகுந்து மனைவியழைத்தார் குழந்தை
யெடுத்துக்கையிலேகொடுத்தார்.

பார்த்து
தங்கமென்றார் தாளமென்றார்
சிங்கமென்றார் சித்திரமென்றார் (நன்னா)
-----------

தெம்மாங்கு
பிரளியெடுத்தமுதல் பெருமலடி வேடுவச்சி
திருவுருவைவாங்கினதே திரண்டுதையாமார்பிரண்டும் (நன்)

அலங்காரம் ஐயா
அன்னமென்றார்அமூர்தமென்றார் அமாருலகம்ரதியேயென்றார்
பொன்னேயென்றார்பொருனேயென்றார்போதாதில்தபேர்களென்னார்

ஐயா
தெள்ளுவனத்தில்திருனைப்போல தேசமயங்கும்கிளியைப்போல
வள்ளிக்கொடியிலிருந்ததாலே என்னியென்று அழைக்கமேலே

ஐயா-பயணிகளளித்தார் பாதுகாத்தார்.
விளியகளித்தார் யேந்திவனர்த்தாள் (நன்னா)
----------------

தெம்மாங்கு வள்ளி
நித்தமொருகிறமாய் நேசிறையாள் தாள்வளர்ந்து
புத்தியறிந் தவுடன் புனங்கார்க்க வந்திட்டாளே (நன்)

ஐயா
உத்தமதாதியர் அருகிலிருக்க உயர்த்தபாணைமீதிற்சிறக்க

சித்திரகவுண்டு கையிலேயிருக்க சிங்காரவள்ளியும்வாயைத்திறக்க (தன்)

ஐயா
ஆனோ ஆலோ அன்னக்கினியே அருகவாங்கவர்ணக்கிளியே
காலப்பயிசேகெடுக்காதீங்கோ காளகமிருக்குபோய்பிளைங்க

ஐயா-காட்டுப்பறவை யோட்டநினைப்பான்
சீட்டிகவுண்டை மாட்டிவடிப்பாள் (நன்)
-----------

விருத்தம்.
தன்னிடபிர்போங்காக்குர் தாதிமாருடனேலள்ளி
உன்னி தப்பாளைமீது வுயர்வாயிருக்கும்போது (நன்னா)

தென்பொதியலையைத்தாண்டி திருட்டுனாரதனுமக்கே
கன்னியில்வுருவைப்போவே கைப்படமெழுதறுற்றான்.
-----------

தெம்மாங்கு
பொதிகைமலைகடந்த பின்புறணினாதனும்
விதிதுலைத்துபோகாமலே வந்துநின்றான் புனத்தருகே, (நன்னா)

அலங்காரம் ஐயா
அர்ப்புதக்கிளியோ அணங்கன் தியோ அமார்பதியோகுமரர்மதியோ
அளகிலிவளைப்போலலைகில் அறியேனறியேனையோசியனே

ஐயா
சமரபுரியில்லேன்வடிவும் சரியேசரியேயிவளின்னடிவு
பிரமனெப்படியமைத்திட்டானோ படத்திலெப்படியெழுதுவேனோ

வள்ளியை-உத்துப்பார்த்தான் உறுதிபிடித்தான்
படத்தையெடுத்தான் பதியத்தொடுத்தான் (நன்)
------------

தெம்மாங்கு
மேகம்போல் கூந்தலிட்டு மின்னலைப்போல் சுட்டியிட்டு
சோகவர்ணக்கினிகளைப்போல் சுந்திரமாய்பின்னல் போட்டான்

அலங்காரம் ஐயா
சந்திரன் போலவதனமெளுதி சகலலசியதிலர்தமெளுதி
மந்திரம்போலேசெனிகளெளுதி மயிலைப்போலேவிழிகளெழுதி

ஐயா
குமிழிபோலனாசிகனெழுதி கூவிளம்போலத்திலநமெளுதி
குமிழிபோலன் தனத்தையெழுதி சித்தசள்காமாசத்தையெளுகி

ஐயா ரவிக்கைபிருக்க ஸ்தனங்கள் கெருங்க
கரும்புக்கணையில் அரும்புசொரிய தெம்மாங்கு. (நன்னா)
---------------

தெம்மாங்கு
ஆலிபோல்வயறெளுதி அரவமெனப்படமெழுதி
சேலையதிற்சேர்த்தெழுதி சித்திரம்போள்சரிகைகோர்த்தான் (நன்னா)

அலங்காரம் ஐயா
கரும்பைப்போலக்கால்களெழுதி கரத்தில்லளயல்பொருந் தயெழு
விரல்கதோறுமோதிரமெழுதி வெண்டபம்போளக்கண்களெழுதி

ஐயா
வாழைப்போலனுடைகளெழுதி வச்சிரம்போலகணைக்களழுதி
புத்தகம்போலயாதபொழுதி முனைப்போலேவிரல்களெழுதி

ஐயா - தண்டையெழுதி கொலுசையெழுதி
கொண்டைனிரைய மலரையெழுதி (நன்னா)
-------------

தெம்மாங்கு.

பொன்னாபானபொல்லாம் பூட்டியெழுதிவிட்டு
மன்மதனும்பின்னிடவே மதனத்தேமல் கலந்துபாட்டான். (என்)

அலங்காரம் ஐயா
வள்ளிபடத்தையெழுதிப்பிடித்தான் வானவர்பெண்களை நினைத்துசிரித்தான்
பார்த்துபார்த்துமனது.துடிப்பான் படத்தையெடுத்து ஓடிவருவான்

ஐயா
காடுகடந்துசெடிகள்கடந்து கானகவிலங்குமலைகள்கடந்து
வேர்த்துவேர்த்துஓடிவர்தான் விடியுமுன்னமேதணிகைசேர்ந்தான்

ஐயா-படத்தைகொடுத்தான் பாதத்தில்விழுந்தான்
காட்டிகாட்டி காலைப்பிடித்தாள் (நன்னா)
-------------

தெம்மாங்கு
பன்னிரண்டுகையாலும் படமேந்திவேல் முருகர்
தன்னை மறந்தல்லவா தறையுடனேமூர்ச்சையானார் (நன்னா)

ஐயா
மோகம்பெருகிமூர்ச்சையானார் முழித்துளிழித்து படத்தைப்பார்ப்பார்
அழைத்துஅழைத்துசளித்துகிற்பார் ஐயோயென்னடிகோபமென்பார்

அடியே
வாயை திறந்துவார்த்தைகூறடி வருத்தமிருந்தால துவும்சொல்லடி
கோபம்பொருத்துமுகத்தைப்பாரடி கோடிசரணம்தயவுசெய்யடி

அடியே -பிடையூரென்னடி யெடுத்துப்போடி
தடையதென்னடி தகுதியல்லடி.
--------------

தெய்வானைசொல் தெம்மாங்கு.
திருட்டுமுனிநாரதனே தேசத்துக்குண்டிணிபே
ஒருகம்பத்திலிரண்டாளையை ஒட்டவைக்கவந்தாயோடா

அலங்காரம் அட்டா
இல்லாதவார்த்தைகள் முடியாயப்போடுகிறாய்
எங்கையோயிருந்து படத்தைக்கொணர்ந்தாய் (நன்னா)
-----------------

தெம்மாங்கு
கோபம்பெமுகிவள்ளி கூப்பிட்டாளண்ணர்களை
ஆபத்துஏதோயென்று ஆவலுடனேஓடினாறார் (நன்னா)

அலங்காரம்-ஐயா
வேடர்வருகும்வேகம்பார்த்தார் வருகுமுன்னமேவிசிபோட்டார்.
ஓடியெழுந்து வேங்கைமரமாய் ஓங்கிவளத்து தழைத்து நின்றார் -

ஐயா
எழுபேருந் துடர்த்துவந்தார் எங்களையேதுக் கழைத்தாயென்றார்
வேங்கைமரத்தின் சொகுசைக்கண்டார் வாளையுருவி யேந்திக்கொண்டார்

அப்போ
அண்ணா அண்ணாமொழியைகேளுமே அருகிலிருந்தால்நிழலைத்தரு
வெட்டவேண்டாம்பொருங்களண்ணா வேரேஒருவர் காணமண்ணா
எனனோஒருவன்வளயள்ளித்தாள் எடாகோடமாய் பேசிபோட்டா
அங்களையவனும் பார்த்துபோட்டான் ஒடியெங்கையோமறைந்து போட்டான்

அண்ணா.
காட்டோடங்க காரியம்பாருங்க
அருகிலிருங்க அழைத்தாவாங்க (நன்னா)
------------

தெம்மாங்கு
தங்கைக்குறிதிசொல்லி தனிவழியேலேடரெல்லாம்
சிங்கம்போலே எழுபேரும் சென்றுவிட்டார் கானகத்தில் (நன்னா)

அலங்காரம்-ஐயா.

வேங்கைமரமாய் யிருந்தவேலர் வேரேவுருவம் பெடுக்கரித்து
தாடிசடையும் தளந்தவடிவும் தாங்கி நடக்க கையிலேகோலும்

ஐயா
விழுந்துவிழுந்து யெழுந்துகடப்பார்வேடரையழைத்து வழியைக் கேழ்ப்பார்
பழுத்தபழுமாய் வருவகாட்டுவார் பாதைதெரியலையென்று அழு வார்

ஐயா-வேடர்பார்த்தார் விசனப்பட்டார்
கூடஅழைத்து கூட்டிவந்தார். (நன்னா)
---------------------

தெம்மாங்கு.
தளர்ந்தவயதுடைய தம்பிரானைக்கண்டவுடன்
யிளம்வயதுவள்ளியற்கு எற்றதுணையாகுமென்றார் (நன்னா)

அலங்காரம்-ஐயா.
ஐயாஐயாபெரி பலகே ஆறுனைகளமுண்டெ
யிப்பேர்ப்பட்டசாளரத்தில் யெங்கேபோர்தனியார்கே (நன்னா)

ஐயா
வார்த்தையிவர்க்குகொடுத்துக்கொண்டே வழியில்மெள்ளநடத்தி க்கொண்டே
வள்ளியிருக்கும்புனத்தைகண்டே வைத்தார்காவஸ்பரனையண்டே

ஐயா
எழுபேர்க்குத் தங்கையையா ஏற்றதுணைகளில்லையையா
உன்னிடடயிர்போல்காஅமையா ஒருகுறைவுமே செய்யாளையா

ஐயா-போயிவாரம் பொழுதுநோம்
யேதுவேளை வருவம் நாளை (நன்னா)
------

தெம்மாங்கு
தாடுசடைநிறைத்த தன்னாக்கிழவனுக்கு
வேடிக்கையை காட்டிகாட்டி வேதோறும்பசியைத்தீர்ப்பாள்

அலங்காரம் ஐயா
வலையைவீசி கிளைகள்ணிபிடிப்பாள் வந்துகிழவன்முன்னேவிடுவாள்
தடியையிழுப்பாள் தாடிபிடிப்பாள் தழுவியணைத்துமுத்தமிடுலாள்

ஐயா
புலிகள்வருதுபாருமென்பாள் போய்பிடிப்போவாருமென்பாள்
தடியைப்பிடுங்கியோடிப்போனாள் தறையில்விழுந்தாலெடுத்துவிடுவாள்

ஐயா
மேலேவிழுவாள் மெள்ளௗக்கடிப்பாள்
கோலம்புமறிவான் குறிகிப்படுனால் (நன்னா)
----------

தெம்மாங்கு
உண்மைக்கிழவகினன்று உயிர்போலக்காக்கையிலே
தண்ணீர்வேணுமென்றுசொல்லி தவிக்குனே ஆண்டிக்கிழவன்

அலங்காரம் ஐயா
மரவுகொடுத்தாதிங்கமாட்டான் மறையடைக்குதென் றுவிழுவான்
வாயைகுளறி தண்ணீரென்பான் வள்ளியேடயிருபோகுரென்பான்

அடியே
பரவியேண்டிகொல்லுறாயென்பான் பறணைமீதுசாகுறேனென்பாள்
கூவியழைத்து தண்ணிரென்றான் குருகிபடுத்து மூர்ச்சையானான்

ஐயா-பேச்சியற்றாள் பிரகலற்றான்
மூச்சியற்றான் மோடிசெய்தான் (நன்னா)
--------

தெம்மாங்கு
பாவிகிழானாலே பழிகள்வந்துநேருதென்று
நாவியேபுளங்களெல்லாம் தண்ணீர்தேடியலைத் திட்டாதே (நன்னா)

அலங்காரம் ஐயா,

வனங்கள் முழுதும்அலைந்தேனையா வஞ்சிக்காலும்சோர்ந்தேனையா
பனங்களெல்லாம் திரிந்தேனையா பொட்டுஜெலமும் கிட்டாதையா

ஐயா
சுனையிலேஜெலங்கிடைக்குமையா சொல்லும் வார்த்தை கேளுமையா
பத்திரமாகவாருமையா பழியில்லாமல்கார்ப்பேனையா

என்று எத்தியணைத்தாள் யிருகப்பிடித்தாள்
சாய்த்துநடந்தான் களையையடுத்தாள் (நன்னா)
-----------

தெம்மாங்கு
வள்ளிஜெலத்தைக்கண்டு வாருமையா சுனையிலென்றாள்
அடிதள்ளிவிட நினைக்குறாயோ தந்திரங்களரிவன்போடி (நன்னா)

அலங்காரம் ஐயா
வள்ளியைக்கரையில் திருத்திபோட்டான் வரட்டுக்கிளவன் சுனையில்நுழைத்தான்.
கள்ளங்கபடும் மனதில்கினைத்தான் கணபதிதன்னை வேண்டிக்கொண்டான்

அடடா
அண்ணா அண்ணா கணபதியே அடியெனக்கொரு வுதவிசெய்யே
வெள்ளையாளைபோல் துரத்திவாயே வள்ளியையென்னுட எருகில் சேரே

அடடா உனக்கு
வயறுகிறைய கடலைகண்டல் வாளைகுலையுந் தேங்காயினநீர்
பெயருவுருண்டை தயிருமோரு பாலும்பளமும் அவலுங்கடலை

ஐயா உனக்கு,
பாங்காய்த்தருவேன் பசியைத்தீர்ப்பேன்
தாங்கலரியே ஓங்கித்தூரத்தே (நன்னா)

தெம்மாங்கு
தம்பிரினைந்தவுடன் தாமிசங்கள்செய்யாமலே

கும்பமதயானைபோல கூச்சலிட்டு ஓடிவாதான் (நன்னா)

ஐயா
கண்டு அவறிகூச்சலிட்டாள் கையைவிரித்துலோடிவந்தாள்
பண்டா மெர்தனைபாருமென்றன் பறந்துமேல்விழுந்துபிடித்தாள்

அடடா
ஐயாஐயா அபயமையா அடியானெக்ளைகாருமையா
கையுங்காலும் துடிக்குதையா காட்டானைமிரட்டுதையா

ஐயா
வெள்ளையானை நாத்துதையா விட்டுவிட்டுப்போகாதையா
பெண்ணின் முகத்தைபாருமையா பழிகளுக்குகேளுமையா
யென்று-கட்டிப்பிடித்தாள் கண்ணீர்விட்டாள்
கிட்டிபிடித்தாள் கிலேசப்பட்டான். (நன்னா)

-----------

செம்மாங்கு
கட்டிப்பிடித்தவுடன் கணபதிக்கிசைகைபண்ணி
சித்திரமயில்மேலேறி சிங்காரமாய்த்தோன்றினாலே

அலங்காரம் ஐயா
ஆறுமுகமும்பன்னிருகரமும் அமுஞ்வேறும் அணிந்தக்கும்
பாரமபிலும்பரூத்தவடிவும் பாகசிலம்பின் ஒசையொளியும்

உன்னிடகுலத்து தொழிலேகாட்டுறாய்
ஒருவர் குடியை செண்டாய்பிரிக்குறாய்

அடடா-குண்டுணியுனக்கு யிதுவேதொழிலா
கூட்டிகொடுக்க வெக்கமில்லையா
தாடியுஞ்சடையும் உனக்குயேதடா
தாடையில்போடுவேன் வெளியோடடா.

அடடா-வுனக்கு ஈறைத்தும்போச்சே காளுமாச்சே
திருட்டுப்பேச்சே குடியாய்ப்போச்சே. (நன்னா)

நந்தன்சொல் தெம்மாங்கு

ஒன்று மறியோம்மா வொருகுடியுங்கெடுக்களில்லை
சென்றுவந்த வழிகளிலே கண்டதைாரன்சொன்னேனம்மா, (நன்னா)

அம்மா.
பொதிகைமுதலாய் மலைகளெல்லாம்பார்த்துபார்த்துதவத்திலிருக்க
தினாலுலகந்தேடித்தேடி பாதைவழியாய் வந்தேனம்மா

அங்கே.
சித்திரச்சாலையும் சந்தனச்சோலையும் பத்தரைமாத்தி படிகத்துறையும்
அன்னக்கிளிகள் அமர்ந்தபுனமும் ஆருமறியா பூங்காவனமும்

ஐயா வழியில் பார்த்தே வந்துவுரைத்தே
பழியைத்தீர்த்தே பாதம்புடித்தே.
------------

தெம்மாங்கு,
வேடனைப்போல் வடிவெடுத்து வேல்முருகரேதுசெய்தார்
ஜாடை சொல்லிநாரதனை ததிரமாயழைத்துகொண்டார். (நன்னா)

அலங்காரம் ஐயா,
குண்டுணிநாரதன் முன்னால்நடக்க குமளேடன் பின்னாஸ்நடக்க
கண்டவனத்தை திரும்பிபார்க்க கந்தர் மனது வள்ளியைலோக்ககொண்டு

ஐயா,
வள்ளிவள்ளியென்றழைத்துகொண்டு வழிகள்தோறும் பார்த்துக்
நளினவன த்தைதேடிக்கொண்டு நடக்கமனமும்சகித்துக்கொண்டு

ஐயா-புனத்தைக்கண்டார் பெண்ணேயென்றார்
வளத்தைக்கண்டார் வள்ளியென் றார். (நன்னா)

சுப்பிரமணியர்சொல் தெம்மாங்கு,

வஞ்சியிளங்கொடியே வளரும்மூன்றாம்பிறையே
கொஞ்சும்பிளங்கினியே கொல்லுதடிகாமபாணம். (நன்னா)

அடியே
காமாதியே கனகக்கொடியே காய்க்கும்வடிவே பூர்க்கும்வயதே
தேமலொளியே திருவினுறாவே தெய்வலோக வருணக்கிளியே.

அடியேன்னை.
வனத்தில்ளிட்டபாவிகளாறு வஞ்சளைசெய்ததெய்வமுக்கூறு
யிந்தவயதில் ஒண்டியாயிருக்க எப்படியுனக்கு மனமும்வந்தது.

அடியே
காமமிருதே கவலையாகுதேகாமன்கணைகள்மாறில்தைக்குதே
தேமல் முலைகளென்னைபார்க்குதேதிருவுமுன்னிட முகத்திஸ்கிற்குதே

அடியே.
அஞ்சனவிழியே அமுர்தமொழியே கொஞ்சங்கிளியே கோர்த்தமல்லியே
சஞ்சலமொழிய சைக்கொல்லடி சஅதிபாணை யேறிவாரேண்டி

அடியே-தாமதமென்னடி தயவுசெய்யடி
காமனைவெல்லடி கட்டிச்சோடி. (நன்னா)

ஆறுடைய கற்பழிய அனியாயம் செய்தேனையோ
தாறுமாறாபென்னையிப்போ தனிவழியில்யே றானே. (நன்னா)

அலங்காரம் ஐயா,

ஐயோஐயோ ஆதிசிமே அட்டபுவணம் உண்டபொருனே
சைகள்ரா ருடையமுருகா காலகானின்றபாலா

ஐயா,

மருதைவீரா மாடன்முனியா விதமிருக்கும் வீட்டுக்காளி
தொட்டியசின்னா துறையகருப்பா துஷ்டனெவனோ அள்ளிவிழுறான்

ஐயா.

இந்தவிதியும் நேந்துபோச்சா யென்னுடவிரத மழிந்துபோச்சா
கற்புஅழிய காளமச்சா காற்குக்தெய்வம் விலகிப்போச்சா

ஐயா.
சன்னிதவத்தி லென்னகுறைவு
என்னை பழிக்கம் பார்த்திருக்குரீர். (நன்னா)
---------------

தெம்மாங்கு,
மாதுவருத்தமுற்று மார்புருளத்தானழவே
வேதனைகள்நேர்ந்துதென்று வேறேயொருவடிவெடுத்தார். (நன்னா)

ஐயா.
வளையல்சுமையைத்தோனிலிட்டார் வள்ளிபணுக்கருகின்வந்தார்
வளையல் விற்கிறசெட்டியைபோல வளையல்வளையல் வளையலென்

ஐயா.
வளையலென்றமொழியைக்கேட்டாள்வள்ளியும்பானையிரங்கிபோட்டார்.
அருகிவழைக்க தாதியைவிட்டாள் அடுத்தவுடனே விலையைகேட்டார்

ஐயா-தேனுத்தினையும் தருவமென்றால்
காணும்வளயிலிடுவுமென்றான் (நன்னா)
----------

தெம்மாங்கு.
தேனுந்தினைமாவும் திண்ணபாசியில்லையடி
மானேயென்போசுந்தீர மருவிருந்தாபோதுமோடி (நன்னா)

அளங்காரம்-அடியே.
ஒன்பதத்தின மிழைத்தவளையல் உந்தனுக்கேத்த சந்திரவளையல்
முத்துவளையல் மோகனவனையல் மூன்றலோசமும்மதிக்கும்வளையல்

அடியே.
வித்திரவளையல்மந்திரலளையல் இமையோராதிகள் மயங்கும்வளையல்

செந்தியில் முருகன் செய்தவணையல் சிவகாமிமருமகளின்வனையல்

அடியே-விலையைக்குறித்து விசனம்வேண்டாம்
வளையல்குறித்து வருத்தம்வேண்டாம் (நன்னா)
------------

தெம்மாங்கு.
பிச்சைக்கிவத்தபையில் பெண்டாள அழைத்ததுபோல்
கொச்சைமொழிபுரைக்கவந்தாய் கொடுத்திடுவாய்யெமனுக்குயிர்ப்பார்

அலங்காரம்-ஐயா.
அறிகிலண்ணமார் காவலிருக்குறார் ஐயோஉன்னிட வுபிரைப்பரி
பெண்டுபிள்ளைகளிருக் முதானால் போயிபார்த்துபிழைத்துபோடா

ஐயோ-இந்தவயதி லிறக்கநாளா எனோதனியே மாண்டுபோறய்
வந்தவழியே நடந்துநடு வளத்தைவிட்டுக் அப்புரம்ஓடு

அடடா பிரந்தமகாயை போயிசேரு
பிரளியிருந்தா போமிபாரு (நன்னா)

வேலரைக்
முருகரழகை பார்த்துபார்த்து மோகக்கடலில் வள்ளிவேர்த்து
ஆறுமுகமே அமர்ந்தபொருளே அடியாளெந்தனை சோதித்தாயே

ஐயா யென்றுமயங்கி ஏக்கமிட்டான்
நின்று மயங்கி சிலையை மறந்தான் (நன்னா)
-----------

தெம்மாங்கு.
இதுதான் சமயமென்று யெடுத்தணைத்து வேல்முருகர்
ஆவலெல்லாந்தீர்த்துக்கொண்டு அன்னமோான்போரேனென்றாம்

அலங்காரம்.
ஆறுமுகத்தின் வடிவைக்கண்டான் ஆனந்தமா யேங்கிகின்றாள்

வேரே நினவு மரந்துபோட்டான் விரகமூர்ச்சை யாகிகின்றாள்.

ஐயா
எனக்காயித்தனை வடிவுகொண்டீர் ஏழைமனதை சோதித்தீர்கள்
கொண்டகருத்தை முடித்துக்கொண்டர் கூசாமலேபோரேனென்றீர்

ஐயா ஞாயமல்லடுவ நடுவுமல்லவே
மாயமந்திரஞ் செய்திட்டமே. (நன்னா)
----------

தெம்மாங்கு
சத்தியமாய்நாளையிங்கு ஈரசமாடவருவேனென்று
சத்திருக்குங்க ங்கானகத்தில் சென்றார்முருகர்வேடர்முன்னே.

அலங்காரம்
பஞ்சாங்கத்தை கையிலெடுத்தார் பார்ப்பானைப்போல் வடிவெடுத்
அஞ்சாமலேவேடரெதிரே ஐயர்போலே வருகிறாரே

அடடா
வனத்திலிங்கே ஆரும்பிள்ளாய் வருகுங்கெதியை கேளும்பின்னாய்
எழுபேர்க்கும் விளையமாது திருப்பதுண்டா வள்ளியென்று

அடடா
சுந்தனென்கிற கள்ளக்காரன் கன்னிசிறையை யெடுக்கவருவான்
நாளைபொழுது பாதியிகளில் நடக்கப்போர சேதியுரைத்தேன்.

அடடா. குகையிலிடுன்சு கதலைபோடுங்க
எழுபேருமா காத்திருக்க (நன்னா)
-----------

தெம்மாங்கு.
திருட்டுபஞ்சாசமதை தீரமுடன்சொல்லவிட்டு
சிறையெடுக்குள் கள்ளனைப்போல சுப்பிரமணியர் மடிவெடுத்தார்.

அலங்காரம்

ஐயருரைத்த கட்டளைபோலே அழருவள்ளியை குசையிலிட்டார்.

எழுபேருமாய்கத்தியுருவி யேபாகுமலே காத்திருந்தார்

அப்போ

கொண்டார்.

திருடனைப்போல் வடி.வெடுத்தார் திருட்டுக்கந்தனும் வெருங்கிக்

திறந்செடுத்து வோதிப்போட்டார் தேவிவன்ளியை தூக்கிகொண்டார்

அப்போ

குகையைவிட்டு கடந்துவந்தார்கூச்சலிட்டிவர் மூர்ச்சை தெளிந்தார்

தெரிந்துவழியில் மடக்கிக்கொண்டார் திருடனென்ற வெட்டவந்தார்

அப்போ

பஞ்சாட்ராத்தை யோதிவிட்டார் படுக்கமூர்ச்சையாக்கிவிட்டார்

அஞ்சினள்ளியுங் காலிள்ளிழுந்தாள் அண்ணமார்களை வெழுப்புமென்றாள்

அப்போ.

மூர்ச்சைதெளிய மொழிகளுரைத்தார்

வாழ்த்தியெழுப்பிவாத்தைக்கொடுத்தார். (நன்னா)

-------

தெம்மாங்கு

கைகட்டினாய்புதைத்து கந்தருடன்யேதுசொல்லார்

மெய்யையறியாமலே வேதனைகள் நினைத்தோமையா. (நன்னா)

ஐயா,

வள்ளியைக்கேட்டா தரவுமாட்டாமா வனத்திலிப்படி வரவும்வே

எங்களை சோதிக்க நேரமாகுமா யேனோயித்தனை கோலமாகுமா

ஐயா.

ஏதுகுறைகள் செய்தபோதும் எல்லாம்பொருத்து அறுளை தாறம்

சூதுவாதும் அறியமாட்டார் சோதனைக்கெதி ராகமாட்டார்

ஐயா அபயமென்னார் அஞ்சிகின்றார்.
விபரமென்றார் வேண்டிக்கொண்டார்.

--------

தெம்மாங்கு
வள்ளியுட அண்ணனுக்கு வாழ்த்தி வரங்கொடுத்து
புள்ளிமயிலேறி யல்லோ போயமர்ந்தார் தணிகைமலை. (நன்னா)

அலங்காரம்.
வேலும்வாழி மயிலும்வாழி வளந்துவேட டுரத்தினாழி
இந்திரனீன்ற தெய்வானை வெர்தளுளும் ஈசுமாய்வாழி
ஆறுமுகத்துகடவுள்வாழி அண்டாண்ட மேழும்வாழி.
பாடிபடித்து பதமுறைத்தோர் பலத்தகுடியாய் பெருத்துலாழி

ஐயா. மண்ணும்மாழி விண்ணும்வாழி
மதியும்வாழி கனியும்வாழி. (நன்னா)

**வள்ளியம்மை அலங்காரம் முற்றிற்று.**

-------------